












ඒ.සී.එම්.රිෆ්කාන්
විදුහල්පති
බප/මතු/අන්නාසිගල දෙ. ප්‍රා.වි.
නවුත්තුඩුව - මතුගම

# ஆய்வுகள் தினம் மார்ச் 14

இன்றைய நாள் காலைக்கூட்டத்தின்போது இன்று எமது பாடசாலையில் மேற்கொள்ளப்படவுள்ள ஆய்வுகள் தின நிகழ்வுகள் பற்றி சிறு விளக்கம் அளிக்கப்பட்டது.

கல்வி அமைச்சு செயலாளரின் EP/03/56/21/2019 எனும் இலக்க 2019.02.22 ஆம் திகதியுடைய கடிதத்தின்படி ஆய்வுகள் தினத்தையொட்டி ஆரம்பக் கல்வி வகுப்புக்கள் மட்டும் காணப்படும் எமது பாடசாலையில் அதிபரின் தலைமையின் கீழ் இனங்காணப்பட்ட துறைகளின் கீழ் பின்வரும் விடயங்கள் திட்டமிட்டு செயற்படுத்தப்பட்டன.

மு.ப 11.00 மணிக்கு 32 மாணவர்களும் பொறுப்பாசிரியர்களுடன் பாடசாலை மைதானத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.

- சுற்றுப்புறச்சூழலில் பறவைகளின் நடத்ததைக் கோலம் அவதானிக்கப்பட்டு, மாணவர்கள் தமது கருத்துக்களைத் தெரிவிக்க சந்தர்ப்பம் அளிக்கப்பட்டதுடன், வினாக்கள் தொடுத்து அதன் மூலமாக கருத்துக்களை வெளிப்படுத்த சந்தர்ப்பம் வழங்கப்பட்டது.
- பாடசாலை வளாகத்தில் உள்ள மரங்கள் மற்றும் மலர்களை அவதானிக்கச் செய்து அவை தொடர்பாக தமது கருத்துக்களை முன்வைக்கவும் வினாக்கள் தொடுத்து விழிப்புணர்வை ஏற்படுத்தவும் சந்தர்ப்பம் வழங்கப்பட்டது.
- தாம் எற்கனவே கற்ற எளிய பரிசோதனைகள் ஊடாக அவற்றை மீண்டும் நினைவுபடுத்தி மனதில் பதித்துக் கொள்வதற்கான சந்தர்ப்பம் வழங்கப்பட்டது.
- வீட்டிலும் பாடசாலையிலும் மிக அழகானதும், நேர்த்தியானதும், அமைதியானதுமான சூழலை உருவாக்குவதற்காக பின்வரும் விடயங்கள் கலந்துரையாடப்பட்டன.
  - கழிவு முகாமைத்துவத்தை பாடசாலையைப் போன்றே வீடுகளிலும் முறையாக மேற்கொள்ள வழிப்படுத்தல்
  - கழிவுப் பொருட்களை மாற்றுச்சாடிகளாகப் பயன்படுத்தல்.
    (தென்னம் மட்டை,, தயிரச்சட்டிகள், ,யோகட் கோப்பைகள், பிளாஸ்டிக் பொருட்கள், ரயர்கள், வெற்றுப்போத்தல் கொண்டு மரங்கள் வளர்ப்பதற்கு வழிப்படுத்தல்.)
  - தடிகளால் வேலியமைத்துப் பாதுகாத்தல்.
  - செங்கற்கள், ஓடுகள் கொண்டு அழகுபடுத்தல்.
  - வீட்டுத் தோட்டத்தில் முறையாக மரங்கள் நட்டுப் பராமரித்தல்.
  - பெரிய மரங்கங்களில் தண்டுகளை ஒட்டி வளர்த்தல்.
  - கிணற்றுக்குப் பக்கத்திலும். நீரோடும் வாய்க்காலுக்குப் பக்கத்திலும் கீரைப்பாத்திகளை அமைத்தல்.
  - எமது நாட்டுப் பழமரங்களை நடுவதற்கு ஊக்கப்படுத்தல்.

எமது பாடசாலையில் மேற்கொள்ளப்படும் பழச்செயற்றிட்டம் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது.

**அன்னாசிகல தமிழ் ஆரம்ப வித்தியாலயம்.**
**மத்துகம.**